# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDGE, SMALL CAUSES, CHENNAI

**M.C.OP.No. 5120/2021** **DATE :26.09.2024**

Deposition of Witness : P.W.1
Name : Mrs. Geetha
Father/Husband Name : Mr. Karmegam
Age :
Address :
Cell Phone No :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 26th day of September 2024.

---

**1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து சமயத்தில் வேனில் 11 பேர் பயணித்தனர். அதில் 4 பேர் குழந்தைகள். விபத்தின்போது நான் ஓட்டுநர் அருகே அமர்ந்திருந்தேன். விபத்து வாகனங்கள் நேருக்கு நேராக மோதிக்கொண்டதால்தான் நிகழந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையின் நடுவே தடுப்பு சுவர் கிடையாது. விபத்து ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் நடந்தது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஓட்டுநர் சீட் பெல்ட் அணியவில்லை என்றால் சரியல்ல.

2. காரில் அனுமதிக்கபட்ட பயணியர் எண்ணிக்கையை விட அதிக அளவில் பயணித்ததாலும் அனைவரும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் பேசிக்கொண்டே பயணித்ததாலும் ஓட்டுநர் கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக நான் ஒரு நாள் தான் சிகிச்சை பெற்றேன். எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம்தான். எனக்கு இடுப்பு மற்றும் கால்கள் மற்றும் கையில் காயம் ஏற்பட்டது.

3. நான் தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 3 நகல் ஆவணம்தான். மசாஆ 3 மற்றும் 13 ஆகியவற்றை மெடிகிளைம் மூலம் தொகையை பெற்றுக்கொண்டதால் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 13ல் 3வது பில்லாக உள்ளது வேறு ஒரு நபருடைய பில் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் இல்லத்தரசி. பல தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. எங்கள் வாகனத்தின் உரிமையாளரையும் காப்பீடுதாரரையும் தரப்பினராக சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date:26.09.2024.

Sd/- D. Lingeswaran,
Chief Judge,
Court of Small Causes.